# News Release

# வாகன் நகரம், பிளாக் க்ரீக் புதுப்பிப்பு திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவை முன்னிட்டு VMC நகர மையத்தின் மாற்றத்தை தொடங்கியது

**வாகன், ஒன்ராறியோ (நவம்பர் 11, 2025)** – வாகன் நகரம், வாகன் பெருநகர மைய (VMC) பகுதியில் வெள்ளத்திலிருந்து பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் பிளாக் க்ரீக் புதுப்பிப்புத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இந்த முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டம், வெள்ளத்துக்கு எதிரான நிலைத்தன்மையை வலுப்படுத்த, இயற்கைச் சூழலை மீட்டெடுத்து மேம்படுத்த, மேலும் வாகன் நகர மையத்தைப் புத்துயிர் பெறச் செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம், மேயர் ஸ்டீவன் டெல் டுகா, கவுன்சில் உறுப்பினர்கள், ஒன்ராறியோ மாகாணத்தின் உள்கட்டமைப்பு செயல் அமைச்சர் டாட் மெக்கார்த்தி மற்றும் பல சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்ட நிகழ்வில், திட்டத்தின் கட்டுமான பணிகள் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டன.

திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் 224 மில்லியன் டாலர்கள். அதில், ஒன்ராறியோ மாகாண அரசு நகராண்மை வீடமைப்பு உள்கட்டமைப்பு திட்டத்தின் வீட்டமைப்பை சாத்தியமாக்கும் நீர்வழி அமைப்புகளுக்கான நிதி (Municipal Housing Infrastructure Program's Housing-Enabling Water Systems Fund/MHIP-HEWSF) மூலம் 35 மில்லியன் டாலர்கள், கனடா கூட்டாட்சி அரசு 23 மில்லியன் டாலர்கள், மேலும் வாகன் மாநகரம் 166 மில்லியன் டாலர்கள் ஒதுக்குகிறது.

இந்தத் திட்டம் மூன்று கட்டங்களாக நடைபெற்று, 2031 ஆம் ஆண்டில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது:

- கட்டம் 1: ஜேன் தெருவில் தெரு வடிவமைப்பு மேம்பாட்டுப் பணிகளுடன் எட்ஜ்லி குளம் மற்றும் பூங்கா கட்டுமானம் – தற்போது நடைபெற்று வருகிறது; 2027 இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- கட்டம் 2: நெடுஞ்சாலை 7 கீழ் உள்ள கல்வெர்ட் மேம்படுத்தல்.
- கட்டம் 3: நெடுஞ்சாலை 7 முதல் நெடுஞ்சாலை 407 வரை பிளாக் க்ரீக் நீர்வழிப் பகுதி மேம்படுத்தல்.

நகரத்தின் முன்னியக்க முயற்சி, நிலையான நகர வளர்ச்சிக்கும் காலநிலை மாற்றத்திற்கான தாங்குதன்மைக்கும் அதன் உறுதிப்பாட்டை

வெளிப்படுத்துகிறது; இதன் மூலம் வாகன் நகர மையம் துடிப்பான, பாதுகாப்பான மற்றும் இணைந்த சமூகமாகத் தொடர்ந்து முன்னேறுவதை உறுதி செய்கிறது.

திட்டம் தொடர்பான மேலும் தகவல்களுக்கு, [vaughan.ca/**BlackCreek**](vaughan.ca/BlackCreek) என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

**மேற்கோள்கள்**

வாகன் நகரம் வேலை, வாழ்க்கைத் தரம் மற்றும் குடும்ப நலனுக்கான சிறந்த இடமாக இருப்பதால் இன்று கூட மக்கள் அதிகமாக விரும்பும் நகரங்களில் ஒன்றாக உள்ளது. இந்த வளர்ச்சியை ஆதரிக்க, நம் சமூகத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப முக்கியமான உள்கட்டமைப்புகளில் முதலீடு செய்ய வேண்டியது அவசியம். பிளாக் க்ரீக் புதுப்பிப்புத் திட்டம் வெள்ளத்திலிருந்து பாதுகாப்பை வலுப்படுத்தும், போக்குவரத்தை மேம்படுத்தும் மற்றும் நமது வளர்ந்து வரும் நகர மையமான வாகன் பெருநகர மையத்தில் எதிர்கால வளர்ச்சிக்கு ஆதரவாக இருக்கும் ஒரு முன்னேற்றமான முயற்சி. இந்த முக்கியமான பணியை முன்னெடுத்துள்ள நகரத்தின் அர்ப்பணிப்பு குழுவுக்கும், மாகாண மற்றும் கூட்டாட்சி அரசுகளுக்கும் அவர்களின் ஆதரவு மற்றும் முதலீட்டுக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இது நம் நகரத்தின் வளமான மற்றும் உறுதியான எதிர்காலத்திற்கான அடித்தளத்தை அமைக்க நாம் மேற்கொண்டு வரும் பல நகர வளர்ச்சி முயற்சிகளில் ஒன்றாகும்."
- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

"பிளாக் க்ரீக் புதுப்பிப்புத் திட்டம் நமது சமூகத்தை வெள்ளத்திலிருந்து பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், வாகன் பெருநகர மையத்தின் அழகையும், வாழ்வதற்கான தகுதியையும் மேம்படுத்தும் ஒரு பெரிய முன்னேற்றமான படியாகும். இந்த முதலீடு நிலையான வளர்ச்சியை ஆதரித்து, வருங்காலத் தலைமுறைகளுக்காகப் பாதுகாப்பான மற்றும் திடமான நகர மையத்தை உருவாக்கும். இந்த மாற்றத்துக்குரிய திட்டத்தை நிஜமாக்க அனைத்து நிலைகளிலும் உள்ள அரசுகள் இணைந்து செயல்படுவதைப் பார்க்க நான் பெருமை கொள்கிறேன்."
- கிரிஸ் ஐன்ஸ்வர்த், வார்டு 4 கவுன்சிலர்

"நமது அரசு ஒன்ராறியோவை கட்டியெழுப்பவும் பாதுகாக்கவும், பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உள்ளூர் உள்கட்டமைப்புகளில் முதலீடு செய்கிறது. பிளாக் க்ரீக் புதுப்பிப்புத் திட்டம் புதிய வீடுகள் கட்டுமானத்தைச் சாத்தியமாக்கும் முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்களில் நமது அரசின் சுமார் 4 பில்லியன் டாலர் முதலீட்டின் ஒரு பகுதியாகும். மொத்தத்தில், வாகன் நகரம்

மாகாணத்தின் நகராண்மை வீடமைப்பு உள்கட்டமைப்பு திட்டத்தின் பல பிரிவுகளின் மூலம் 55 மில்லியன் டாலர் பெறுகிறது, இது சுமார் 34,000 புதிய வீடுகள் கட்டுமானத்துக்கு ஆதரவாக இருக்கும்."

- டாட் மெக்கார்த்தி, உள்கட்டமைப்பு செயல் அமைச்சர், ஒன்ராறியோ

**முக்கியத் தகவல்கள்**

- வாகன் நகரம், வாகன் பெருநகர மைய வளர்ச்சியின் மற்றொரு முக்கியக் கட்டமாக, பிளாக் க்ரீக் புதுப்பிப்பு திட்டத்தின் முதல் கட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவை கொண்டாடியது.
- மேயர் ஸ்டீவன் டெல் டுகா, கவுன்சிலர்கள் மற்றும் முக்கிய விருந்தினர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.
- கட்டுமானத்தின் முதல் கட்டம் நடைபெற்று வருகிறது; இது 2027 இறுதிக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- முதல் கட்டத்தில் எட்ஜ்லி குளம் மற்றும் பூங்கா உருவாக்கமும், ஜேன் தெருவில் தெரு வடிவமைப்பு மேம்பாட்டு பணிகளும் இடம்பெறும்.

**மேலும் அறிய**

- வாகன் நகரத்தின் பிளாக் க்ரீக் புதுப்பிப்பு வலைப்பக்கம்

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca